
The Words
of the Lord
are pure words:
as silver tried in
a furnace of earth,
purified seven times.
The Words
of the Lord

Song 4 கர்த்தருடைய சொற்கள்

Psalm 12 (the words of the Lord are pure, refined seven times; He arises to protect the poor); Psalm 19:7–10 (the law of the Lord is perfect, sure, right, pure); Proverbs 30:5 (“Every word of God proves true; he is a shield to those who take refuge in him”); Revelation 22:18–19 (the words of prophecy are faithful and true)

கர்த்தருடைய சொற்கள் ஏழுதரம் புடமிடப்பட்டது
வெள்ளிக்கு ஒப்பான சுத்த சொற்களாகவே என்றுமே இருக்குது
தேவன் இப்பொழுது எழுந்து எளியவனுக்கு சுகத்தை கொடுப்பார்
இரட்சியும் கர்த்தாவே இரட்சியும் தேவனே என்றே சொல்லிடுவேன்

இட்சகம் பேசிடும் உதடுயாவையும் கர்த்தர் கேட்கிறார்
பெருமை பேசும் நாவையாவும் கர்த்தர் கண்டிப்பார்
பொய் பேசும் தோழர்களை கர்த்தர் காண்கிறார்
இருமனதாய் பேசுபவனை கர்த்தர் மேற்கொள்வார்

கர்த்தருடைய சொற்கள் ஏழுதரம் புடமிடப்பட்டது
வெள்ளிக்கு ஒப்பான சுத்த சொற்களாகவே என்றுமே இருக்குது
தேவன் இப்பொழுது எழுந்து எளியவனுக்கு சுகத்தை கொடுப்பார்
இரட்சியும் கர்த்தாவே இரட்சியும் தேவனே என்றே சொல்லிடுவேன்

பக்தியுள்ளவன் பூமியிலே அற்றுப்போகிறான்
உண்மையுள்ள மனிதரோ குறைந்து போயினர்
ஏழைகளோ பாழாக்கப்பட்டு போயினர்
கர்த்தாவே நீர் காப்பாற்றி மீட்டுக் கொள்வீர்

கர்த்தருடைய சொற்கள் ஏழுதரம் புடமிடப்பட்டது
வெள்ளிக்கு ஒப்பான சுத்த சொற்களாகவே என்றுமே இருக்குது
தேவன் இப்பொழுது எழுந்து எளியவனுக்கு சுகத்தை கொடுப்பார்
இரட்சியும் கர்த்தாவே இரட்சியும் தேவனே என்றே சொல்லிடுவேன்